THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

## KE3 – Fundamentals of Taxation & Law

### September 2015

# பகுதி அ

## வரியியல்

## பகுதி 1

**விடை 01**

1.1.

| கற்றலின் விளைவு : 2.1.3 |
|---|
| சரியான விடை: C |

1.2.

| கற்றலின் விளைவு : 3.1.2. |
|---|
| சரியான விடை : A |

1.3.

| கற்றலின் விளைவு : 4.3.1. |
|---|
| சரியான விடை : C |

1.4.

| கற்றலின் விளைவு : 5.1.2. |
|---|
| சரியான விடை : C |

1.5.

| கற்றலின் விளைவு : 5.2.4. |
|---|
| சரியான விடை : D |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**விடை 02.**

2.1

| கற்றலின் விளைவு : 1.2.1 |
|---|
| சரியான விடை :<br><br>வருமான வரி, பெறுமதி கூட்டியவரி, தேச நிர்மாணவரி. பொருளாதார சேவைக்கட்டணம் , முத்திரை வரி, |

2.2

| கற்றலின் விளைவு :<br>3.1.3 சம்பந்தப்பட்ட நியதிச்சட்ட கழிப்பனவுகளை செய்வதனால் ஒரு கம்பனியின் நியதிச்சட்ட வருமானம் ,வரிமதி வருமானம், மற்றும் வரி வருமானத்தினை கணிப்பிடுதல். | |
|---|---|
| சரியான விடை : | |
| வியாபாரத்திலிருந்து செம்மையாக்கிய இலாபம் | 950,000 |
| பெற்ற பங்கு இலாபம் –நியதிச்சட்ட வருமானத்தின் ஒரு பகுதியாக அமையாது | |
| **மொத்த நியதிச்சட்ட வருமானம்** | **950,000** |
| கழி: முன் கொண்டு வந்த நட்டம் | (150,000) |
| **வரிமதி வருமானம்** | **800,000** |
| கழி: அங்கீகரிக்கப்பட்ட தர்மதாபனத்திற்க்கான நன்கொடை | (50,000) |
| **வரிமதி வருமானம்** | **750,000** |

2.3

| கற்றலின் விளைவு : 3.1.5. |
|---|
| சரியான விடை :<br>(i) பகிரத்தக்க இலாபத்தில் ஆகக் குறைந்தது 10% பங்கு இலாபமானது வழங்கப்பட வேண்டும்.<br>(ii) 30 செப்டம்பர் அல்லது அதற்கு முன்பு மொத்த பங்கு இலாபங்கள் வழங்கப்பட வேண்டும்.அதாவது வரிமதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து 18மாதங்களினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

2.4

| கற்றலின் விளைவு : 4.2.1. |
|---|
| சரியான விடை :<br>திரடடினை கோவைப்படுத்துவதற்க்கான திகதியிலிருந்து 18மாதங்களுக்குள் . அதாவது 31மே 2016 அன்று அல்லது அதற்கு முன்பு. |

2.5

| கற்றலின் விளைவு : 4.5.3 |
|---|
| சரியான விடை :<br>தொழில் வருமானத்தில் உழைக்கும்போதே செலுத்தும் வரி மற்றும் வட்டி வருமானத்தில் முறையாக கழிக்கப்பட்டிருக்கின்ற படியினால், **அவருடைய வருமானத்திரட்டினை சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவை அவருக்கு இல்லை.** இதன் கருத்துயாதெனில் அவருடைய வருமானமானது இறுதியானதாக கருதப்பட்டது. |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

# பகுதி 2

**விடை 03**

| கற்றலின் விளைவு : 2.2., 2.3 மற்றும் 2.4 |
|---|
| சரியான விடை: |

## டாக்டர் ருவான்
## 2014/15 வரிமதியாண்டுக்கு செலுத்தவேண்டிய வருமானவரி கணிப்பீடு

பிரதான தொழில்தருநரிடமிருந்தான தொழில் வருமானம்

| | | | |
|---|---|---|---|
| சம்பளம் - 135,000 x 12 | | | 1,620,000 |
| தனிப்பட்ட பிரயாணத்திற்க்கான மீளளிப்பு (இது ஒவ்வொரு மாதமும் ரூபா50,000க்கு குறைவாக உள்ளது. எனவே வரியிலிருந்து விலக்கு பெறுகிறது.) | | | |
| தொலைபேசி பட்டியலின் மீளளிப்பு 38,000 x 50% | | | 19,000 |
| மருத்துவ செலவுக்கான மீளளிப்பு , | | | 200,000 |
| சேமலாப நிதியத்திற்கு தொழில் தருநரின் பங்களிப்பு (உளநாட்டு இறைவரி ஆணையாளரினால் அங்கிகரிக்கப்பட்ட நிதியம் என்றபடியால் வரிவிதிக்கப்படமாட்டாது.) | | | - |
| | | | 1,839,000 |
| இரண்டாவது தொழில் தருநரிடமிருந்தான தொழில் வருமானம் -'924,000/84 x100 | | | 1,100,000 |
| **தொழிலிருந்தான நியதிச்சட்ட வருமானம்** | | | **2,939,000** |
| வியாபார வருமானம் | + | - | |
| வியாபார கூற்றின் படி தேறிய இலாபம் | 11,777,000 | | |
| இரத்த அமுக்கமானியின் விற்பனை இலபபம் (குறிப்பு1) | | 2,000 | |
| வெளிநாட்டு வருமானம் -வதிவிடம்;-123,000-அனுமதிக்கப்பட்டது | | | |
| முந்தய வருட செம்மையாக்கிய இலாபம் =872,000 (1,872,000இல் 2%=37440) 54,000-37,440 | 16,560 | | |
| மனைவிக்கு செலுத்திய சம்பளம் –அனுமதிக்கப் ட்டது. | | | |
| மருத்துவ உபகரண கொள்வனவு | 75,000 | | |
| புதிய அமுக்கமானிக்கான பெறுமான தேய்வு விடுதொகை =21,000 @33 1/3% | | 7,000 | |
| புதிய மருத்துவ உபகரணத்துக்கான பெறுமான விடுதொகை=**54,000 @33 1/3%** | | 18,000 | |
| | 1,868,560 | 27,000 | |

| | | | |
|---|---|---|---|
| செம்மையாக்கப்பட்ட இலாபம் | | | **1,841,560** |
| மனைவிக்கு செலுத்திய சம்பளம் | | | **175,000** |
| **மொத்த நியதிச்சட்ட வருமானம்** | | | **4,955,560** |
| **கழி:** சரத்து 32இல் கீழான கழிப்பனவுகள் | | | |
| திருமணத்திறக்காக எடுக்கப்பட்ட கடனுக்கான செலுத்தப்பட்ட வரி | அனுமதிக்க ப்படாது | | - |
| **வரிமதிவருமானம்** | | | **4,955,560** |
| **கழி:** தகமை கொடுப்பனவுகள் | | | |
| - தொழில் வருமானத்திற்க்கான தகைமை கொடுப்பணவுகள் | | 100,000 | |
| - ஊழியர் சேமலாப நிதியத்திற்க்கான பங்களிப்பு-ஒரு தகைமை கொடுப்பனவு அல்ல | | | |
| - ஆயட் காப்புறுதி கட்டணம் ரூ.80,000 **(ருபா . 75,000 மற்றும் வரிவதிவருமானத்தில் 1/3பகுதி)இதில் குறைவானதிற்கு மட்டுப்படுத்தப்படும்** | | 75,000 | |
| - காப்புறுதி: குணப்படுத்த முடியாத வியாதி **-100% அனுமதிக்கப்பட்டது** | | 75,000 | |
| - கடனுக்கான மூலதன மீள் கட்டணம்-ஒரு தகமை கொடுப்பணவு அல்ல(குறிப்பு 2) | | | |
| | | | (250,000) |
| தனிநபருக்கான வருமான விடுதொகை | | | (500,000) |
| **வரிவிதிவருமானம்** | | | **4,205,560** |

| | | | |
|---|---|---|---|
| *மொத்த வருமானவரி கணிப்பீடு* | | | |
| முதல் | 500,000 | 4% | 20,000 |
| இரண்டாவது | 500,000 | 8% | 40,000 |
| மூன்றாவது | 500,000 | 12% | 60,000 |
| வியாபார வருமானம்-தொழில்நிபுனராக(59f) | 1,841,560 | 12% | 220,987 |
| | 864,000 | 16% | 138,240 |
| | **4,205,560** | | |
| **செலுத்த வேண்டிய மொத்த வருமானரி** | | | **479,227** |
| ***கழி:*** *வரி வரவுகள்* | | | |
| சுயமதிப்பீட்டு வரி கொடுப்பணவு | | 20,000 | |
| உழைக்கும் போதே செலுத்தம் வரி - முதன்மை தொழில்தருநர் | | 91,000 | |
| உழைக்கும் போதே செலுத்தம் வரி - இரண்டாவது தொழில்தருநர் | | 176,000 | |
| | | | (287,000) |
| **செலுத்த வேண்டிய மிகுதி வரி** | - | | **192,227** |

குறிப்பு1:

பழைய இயந்திரத்திற்கு மூலதன விடுதொகை கோரப்படாததனால் இரத்த அழுத்தமானியின் விற்பனையில் செம்மையாக்கப்பட்ட இலாப/நட்டத்திற்கு வரி விதிக்கப்படமாட்டாது .

குறிப்பு 2:

வருமானம் முழுவதும் தொழில் வருமானமாக இருப்பதனால் தகமை கொடுப்பனவாக எதுவும் கழிக்கப்பட முடியாது .இருப்பினும் , இவர் ஏனைய வருமான மூலகத்தினை போதுமான அளவு கொண்டிருப்பதனால் ஆயுள் காப்புறுதி கட்டணம் மற்றும் மருத்துவ காப்புறுதி கட்டணத்தினை ஏனய வருமான அளவுக்கு கழிக்க முடியும்.

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

## பிரிவு – 01

**விடை - 04**

4.1

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள் 1.1.1 - இலங்கை சட்ட முறையின் பிரதான கிளைகளையும் அவற்றின் வகிபங்குகளையும் இனங்காண்க. |
| சரியான விடை : B<br>வழக்காறொன்று நீதிமன்றங்களினால் சட்டத்தின் தோற்றுவாயொன்றாக அங்கீகரிக்கப் படுவதற்கு விடையில் தரப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகள் யாவும் காணப்படுதல் வேண்டும். அதேபோன்று, குறிப்பிட்ட வழக்காறொன்று சட்டத்தின் தோற்றுவாயொன்றாக நீதிமன்றங்களினால் அங்கீகரிக்கப்படுவதற்கு, கீழ்நிலைச் சட்டவாக்கமாக அது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றபட வேண்டும் என்ற தேவையற்றது. |

4.2

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 3.1.1- பொருட்கள் விற்பனைகளுக்கான ஒப்பந்தம் ஒன்றுக்கும் பணிகள் மற்றும் மூலப்பொருட்கள் தொடர்பான ஒப்பந்தங்களுக்கும் இடையிலான வேறுபாட்டையும், குறிப்பிட்ட பொருட்களின் வகுப்பாக்கத்தையும் ஆராய்க. |
| சரியான விடை : B |

4.3

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 5.6.1 தனது முகவர்களால் செய்யப்பட்ட செயல்கள் தொடர்பான அரச பொறுப்புடைமை பற்றி விளக்குக. |
| சரியான விடை : B<br>ஏனைய அனைத்து விடைகளிலும் தனது முகவர்களால் செய்யப்பட்ட செயல்கள் தொடர்பாக அரசு பொறுப்புடைமையைக் கொண்டிருக்காதவைகளாகும். |

4.4

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 6.2.2 வாடகையாளர் மற்றும் சொந்தக்காரின் கடப்பாடுகளை பட்டியலிடுக. |
| சரியான விடை : C<br>ஏனைய அனைத்தும் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழான வாடகையாளர் ஒருவருக்குள்ள கடப்பாடுகளாகும். |

4.5

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 8.11 மோசடி, திருட்டு, இலஞ்சம், பணத்துய்தாக்கல் (*Money Laundering*) கவனயீனம் என்பவற்றை வரையறை செய்வதுடன், அவற்றினது பிரதான பாதுகாப்புக்களையும் விளக்குக. |
| சரியான விடை : C<br>ஏனைய அனைத்தும் திருட்டுக்கான பாதுகாப்புக்களே. |

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**விடை 05**

5.1

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 2.1.1 வலிதான ஒப்பந்தமொன்றிற்கான தேவைப்பாடுகளான அதாவது கொடைமுனைவும் ஏற்பும், சட்ட உறவுமுறையொன்றினை உருவாக்கும் மனஎண்ணம், பிரதிபயன் (*Laesio enormis* - அசாதாரண ஊறு என்ற கருத்தேற்பினையும் உள்ளடக்கியதான), தகைமை மற்றும் வடிவம் என்பவற்றை விளக்குக. ஒப்பந்த உடன்படிக்கை, கொடைமுனைவும் ஏற்பும், ஒப்பந்தத்திற்கான தகைமை, ஒப்பந்த வகைகள், சம்மதத்திற்கான உண்மைத்தன்மை என்பவற்றையும் வரையறை செய்தல். |
| ஒப்பந்தச் சட்டத்திலே ஒரு ஏற்பினை வலிதானதாகக் கருதுவதற்கு அது பின்வரும் விதிகளுடன் இணங்கியிருக்க வேண்டும்.<br>• கொடைமுனைவு வலிதாக இருக்கும் சமயத்தில் ஏற்பு செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>• ஏற்பானது முழுமையானதாகவும், நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும்.<br>• ஏற்பானது தகைமையிழந்ததாக இருக்க வேண்டும்.<br>• ஏற்பானது கொடைமுனைவைச் செய்தவருக்கு சென்றடைந்திருக்க வேண்டும். |

5.2

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 3.2.1 பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தத்தில் பிரயோகிக்கப்படுகின்றதான உட்கிடையான நிபந்தனைகளையும் கட்டுறுத்துக்களையும் விளக்குக. |
| இத்தொலைக்காட்சியின் உரித்து தொடர்பாக 1896ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக கீழ்வரும் உட்கிடை வாசகங்கள் பிரயோகிக்கப்படும்.<br>(i) பொருட்களின் உரித்து வாங்குபவனுக்கு சென்றடையும் போது, விற்பவனாகிய டேவிட்சனுக்கு பொருட்களை விற்பதற்கான உரிமை காணப்பட வேண்டும் என்பது உட்கிடையான நிபந்தனையாகும்<br>(ii) வாங்குபவன் தொலைக்காட்சியின் முழுமையான உடைமையை அனுபவிக்க உரித்துடையவன் என்பது உட்கிடையான கட்டுறுத்தாகும்<br>(iii) பொருட்கள் விற்பனையின் போது வாங்குபவனுக்கு தெரியாத பொருட்கள் தொடர்பான ஏதேனும் சுமைகள் அல்லது கட்டணங்கள் என்பவற்றிலிருந்து நீங்கியவைகளாகவும் பொருட்கள் அமைய வேண்டும் என்பது மேலதிக உட்கிடை கட்டுறுத்து ஆகும்.<br>(பொருட்கள் விற்பனைக் கட்டளைச்சட்டம் பிரிவு 13) |

5.3

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 1.4.1 இத்தகைய நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் ஆளுகை தொடர்பான வகிபங்கினை விளக்குக.<br>பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம், இலங்கை கணக்கீட்டுத் தராதரங்கள் கண்காணிப்புச் சபை, பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப்பரிவர்த்தனை அமைப்பு, முதலீட்டுச் சபை, கம்பனிப் பதிவாளர், சுங்கத் திணைக்களம், மத்திய வங்கி (நாணயமாற்றுக் கட்டுப்பாட்டு அம்சம்). |
| முதலீட்டுச் சபையின் பிரதான பணிகள் கீழ்வருமாறு:<br>• வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் உள்ளக முதலீடுகளையும் கவர்ந்திழுப்பதற்கு.<br>• விண்ணப்ப நிலையிலிருந்து வணிகத்தொழிற்பாடு வரையிலான செயன்முறையின் அனைத்துக் கட்டங்களிலும் முதலீட்டாளர்களுக்கு உதவுவதற்கு.<br>• முதலீட்டாளர்கள் கைத்தொழில் மற்றும் வணிக மையங்களை அமைக்கக்கூடியவாறான ஏற்றுமதி செயன்முறைப்படுத்தல் வலயத்தினை உருவாக்குவதற்றும் நிருவகிப்பதற்கும்.<br>• வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் வருமான வளங்களை பல்வகைப்படுத்தலுக்கும், ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும். |

5.4

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 9.1.2 சர்வதேச வணிக பிணக்குத்தீர்வுச் செயன்முறையை விளக்குக. |
| பொதுவாக, மத்தியஸ்தத்தின் செயன்முறை பின்வருமாறு அமையும்:<br>• பிணக்கிற்கான திறத்தவர்கள் மத்தியஸ்தராக செயற்படுவதற்கு நடுநிலையான மூன்றாம் நபர் ஒருவரை நியமிப்பர்<br>• மத்தியஸ்த செயன்முறையானது மத்திஸ்தராலும் பிணக்கின் திறத்தவர்களாலும் கூட்டாக தீர்மானிக்கப்படும்<br>• பொதுவாக, பிணக்கின் ஒவ்வொரு திறத்தவரும் பிணக்கு தொடர்பான முக்கிய விடயங்களை பட்டியலிட்டு மத்தியஸ்தருக்கும் ஏனைய பிணக்கு திறத்தவருக்கும் சமர்ப்பிப்பர்<br>• இதன்பின்னர் மத்தியஸ்தர் தனது முடிவினை எடுப்பார். இந்த முடிவானது திறத்தவர்களை கட்டுப்படுத்தாது. ஏற்பதும் மறுப்பதும் திறத்தவர்களைப் பொருத்ததாகவே அமைந்திருக்கும்<br>1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபைச் சட்டம் (பிரிவு 10)ஆனது மத்தியஸ்தத்தின் போது பின்பற்ற வேண்டிய செயன்முறையை குறிப்பிடுகிறது. செயன்முறை பின்வருமாறு: |

a) ரூபா.250,000/-இற்கு குறைந்தளவு பெறுமதியுடைய எல்லா பிணக்குகளும் மத்தியஸ்த சபைக்கு மத்தியஸ்தத்திற்காக ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்

b) மத்தியஸ்த சபையானது பிணக்குத் திறத்தவர்களை கலந்துரையாடலுக்கு வரும்படி அறிவித்தல் விடுக்கும்

c) அவசியமாயின், அத்தகைய கலந்துரையாடலுக்கு சாட்சிகளையும் ஆவணங்களையும் கொண்டுவரும்படி தேவைப்படுத்தலாம்

d) தீர்வொன்றை எட்டுவதற்குத் எந்தளவு கலந்துரையாடல் தேவையோ அந்தளவான கலந்துரையாடலின் எண்ணிக்கையினை மத்தியஸ்த சபை ஏற்பாடுசெய்யும்

e) (சட்டத்தின் பிரிவு 13இன்படி) இத்தகைய செயன்முறைகளானவை சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நிறைவுசெய்யப்படுதல் வேண்டும்

f) தீர்வொன்று அடையப்பெற்றதும், தீர்வின் வாசகங்கள் எழுத்துமூலமாகப் பதிவு செய்யப்படுவதுடன், பிரதான மத்தியஸ்தரால் கையெழுத்திடப்படுதல் வேண்டும் என்பதுடன், தேவைக்கேற்றவகையில், பிணக்கு திறத்தவர்களுக்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ வழங்கப்படுதல் வேண்டும்

g) தீர்வொன்று அடையப்பெறாத போது, பிரதான மத்தியஸ்தரினால் கையொப்பமிட்டு தீர்வு அடையப்பெறவில்லை என்ற சான்றிதழ் ஒன்றினை சபையானது வழங்க வேண்டும்.

5.5

கற்றலின் பயன்விளைவுகள்: 8.2.1 பின்வரும் சட்டங்கள் பற்றி சுருக்கமாகக் கூறுக: 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணத் துய்தாக்கலைத் தடுக்கும் சட்டம், 2006ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலத்திரணியல் கொடுக்கல் வாங்கல் சட்டம், கனணி தொடர்பான குற்றங்கள் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச்சொத்துக்கள் சட்டம்.

- கைத்தொழில் வடிவமைப்பு ஒன்றினை பதிவு செய்வதன் பிரதான நோக்கமானது குறித்த சொந்தக்காரர் அக்கைத்தொழில் வடிவமைப்பு தொடர்பான பிரத்தியேக சொந்தத்தினை பெற்றுக்கொள்ளுதலாகும்.
- பதிவு செய்யப்பட்ட எல்லா வடிவமைப்புக்களும் **“கைத்தொழில் வடிவமைப்புப் பதிவுப்புத்தகம்”** என்ற பொது ஆவணத்திலும் பதிவு செய்யப்படுவதுடன் பொது ஆவணமொன்றாக இது காணப்படுவதுடன், எந்தவொரு நபரினாலும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படலாம்.
- குறிப்பிட்ட இப்பதிவு செய்தலானது, பதிவு செய்வதற்கான விண்ணப்பம் பெறப்பட்ட திகதியில் இருந்து 5 வருடங்களுக்கு வலிதாகக் காணப்படும்.
- ஆக்குனரின் விருப்பத்தெரிவிற்கேற்ப இந்த கால அளவானது 5 ஆண்டுகள் அடங்கலாக மேலும் இரு தவனைகளுக்கு விரிவுபடுத்தப்படலாம்.

**மொத்தப் புள்ளிகள் 20**

## பிரிவு – 02

**விடை - 06**

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்:<br>2.2.1 ஒப்பந்த வாசகங்கள், விலக்களிப்பு வாசகங்களின் விளைவு, 1997ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க நியாயமற்ற ஒப்பந்த வாசகங்கள் சட்டம், என்பவற்றால் கருதப்படுவது யாதென விளக்குக.<br>2.5.1 ஒப்பந்த முறிவுக்கான பொதுச்சட்ட மற்றும் ஒப்புரவான நிவாரணங்களை விளக்குக.<br>2.5.2 முறையற்ற செல்வச்சேர்க்கை என்ற கோட்பாட்டினை விளக்குக. |

தரப்பட்ட நிகழ்வுகளில் புரூட்டி என்பவனால் ஒப்பந்த சட்டம் தொடர்பான சில முறிவுகள் இடம்பெற்றுள்ளன. அத்தகைய 3 முறிவுகள் கீழே தரப்பட்டுள்ளதுடன், அத்தகைய ஒவ்வொரு முறிவுகளுக்கும் ஹோட்டலானது பெற்றுக்கொள்ளக்கூடிய நிவாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

a) அத்தகைய முதலாவது முறிவு யாதெனில், ஒப்பந்தத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அளவு எண்ணிக்கையிலான பழங்களை ஆகஸ்ட் 2015இல் விநியோகிக்க அவன் தவறியுள்ளான்.

உணவகத்தினால் தேவைப்படுத்தப்பட்ட மொத்த எண்ணிக்கையினை புரூட்டி அவ்வாறே விநியோகித்தல் வேண்டும். இது ஒப்பந்தத்தின் பிரதான வாசகம் என்பதனால், ஒப்பந்தத்தின் மிக அடிப்படையாவதுடன், ஒப்பந்தத்தின் நிபந்தனை வாசகமாகம் ஒன்றாகவுமே அது கருதப்படுகிறது. ஆகையால், புரூட்டி அதனைச் செய்யத்தவறியமை, அதாவது ஆகஸ்ட்டில் சரியான எண்ணிக்கையான பழங்களை வழங்காமை, அவரால் செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய ஒரு முறிவாக அமையும்.

ஒப்பந்த முறிவொன்றானது, பாதிக்கப்பட்ட திறத்தவருக்கு ஒப்பந்தத்தினை இறுத்தல் செய்யும் உரிமையினையும், நட்டயீடு கோரும் உரிமையினையும் வழங்கும். அதற்கமைவாக ஹோட்டலுக்கு முழு ஒப்பந்தத்தையும் இறுத்தல் செய்யும் உரிமையும், புரூட்டியிடம் இருந்து நட்டயீடு பெறும் உரிமையும் உண்டு. ஒரு நிபந்தனை வாசகம் முறிவடைந்தமையால் ஹோட்டலுக்கு இந்த உரிமைகள் கிடைக்கப்பட்டன.

b) இரண்டாவது மீறுகை யாதெனில், ஆகஸ்ட் மாதத்திற்குரிய பழங்களை சிறந்த தரத்தில் புரூட்டி வழங்கவில்லை.

சிறந்த தரமுடைய பழங்களை வழங்க வேண்டுமென்பது ஒப்பந்தத்தின் உட்கிடையான கடப்பாடு அல்லது உட்கிடையான வாசமாகும். ஆனால் அவ் வாசகத்தின் முறிவானது ஒப்பந்தத்தின் அடிப்படையை பாதிக்காத போது அது கட்டுறுத்து வாசகமாகவே கருதப்படும்.

ஆகவே இந்த முறிவுக்காக குக்கீஸினது ஹோட்டலானது ஒப்பந்தத்ததை இறுத்தல் செய்யும் உரிமையைப் பெறாது. நட்டயீட்டினை கோரும் உரிமையினை மாத்திரமே பெறும்.

மூன்றாவது மீறுகை யாதெனில், புரூட்டி ஹோட்டலுடன் ஒப்பந்தத்தைச் செய்யும் போது, அந்த ஒப்பந்தத்தை செய்ய ஹோட்டலைத் தூண்டுகின்ற வகையில், தேவைப்படுத்தப்பட்ட அளவு பழங்களை, குறிப்பிட்ட கால எல்லையில் வழங்குவதற்கான தகைமை தனக்குண்டு என பொய்யாக ஒரு கூற்றை கூறியமையாகும்.

புரூட்டி இதனை சொல்லும் போது அது பொய்யென நன்கு அறிந்திருந்ததால் அது ஒப்பந்த சட்டத்தின் கீழ் மோசடியான தவறாக வழிநடாத்துதலாக அமையும்.இத்தகைய சந்தர்ப்பத்தில் ஹோட்டலானது குற்றமற்ற திறத்தவர் என்றரீதியில் கீழ்வரும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

- ✓ ஒப்பந்தத்தை இறுத்தல் செய்யலாம், அல்லது
- ✓ நட்டயீடு கோரலாம் அல்லது
- ✓ ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதை மறுக்கலாம் அல்லது
- ✓ ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தலாம் / மேற்கொள்ளலாம்.

**மொத்தம் 10 புள்ளிகள்**

**விடை - 07**

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்:<br>5.7.5 பங்குடைமையாளர்களுக்கிடையிலான உறவுமுறை பற்றிக்கூறுக.<br>5.7.6 பங்குடைமையாளர்களுக்கும் மூன்றாம் திறத்தவருக்கிடையிலான உறவுமுறை பற்றிக் கூறுக. |

**பகுதி (அ)**

கூட்டுப்பங்காண்மை வியாபாரம் ஒன்று பங்குதாரர் என்ற ரீதியிலே பன்ரி ஏனைய பங்குதாரர்கள் தொடர்பிலும், கூட்டுப்பங்காண்மை தொடர்பிலும் சில கடப்பாடுகளை கொண்டுள்ளார்.

ஆனால் தரப்பட்ட நிகழ்விலே பன்ரி கீழ்வரும் தனது கடமைகளை மீறியுள்ளார்.

- ஒவ்வொரு பங்குதாரரும் கூட்டுப்பங்காண்மையை பாதிக்கக்கூடிய எல்லா வணிகத் தொடர்புகள் தொடர்பான உண்மையான கணக்கு விபரங்கள், சகல தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.
  ஆனால், இக்கூட்டுப்பங்காண்மை தொடர்பான கொள்வனவொன்றில் தான் பெற்றுக்கொண்ட நன்மைகள் தொடர்பான விடயங்களை பன்ரி கணக்கில் காட்டாததால் தனது கடமையை மீறியுள்ளார்.
- கூட்டுப்பங்காண்மை தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில், ஏனைய பங்குதாரர்களின் சம்மதமின்றி ஈடுபட்டு ஏதேனும் நன்மைகளைப் பெறுவாராக இருந்தால் அது தொடர்பாக அப்பங்குதாரர், ஏனைய பங்குதாரர்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

  பன்ரி ஏனைய பங்குதாரர்களுக்கு அறிவிக்காமல் தனது பிள்ளைகளுக்கு அன்பளிப்பாக சில பரிசுகளை வழங்கியதன் மூலம் இக்கடமையை மீறியுள்ளார்.

- ஒவ்வொரு பங்குதாரரும் தனது கூட்டு வணிக நிலையம் (Firm) தொடர்பில் பெற்றுக்கொண்ட இரகசிய இலாபங்களை அறிவிக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பொறுப்புக்கூறவும் வேண்டும்.
  தன் பிள்ளைகளுக்கு கொடுத்த அன்பளிப்புகளின் ஒரு பகுதிக்கே போலியான பற்றுச்சீட்டுக்களைத் தயாரித்ததுடன் அந்தப் பற்றுச்சீட்டுக்களையும் கூட்டுப் பங்காண்மை கொள்வனவுடன் உள்ளடக்கியமையால் மேற்குறிப்பிட்ட கடமையை பன்றி மீறியுள்ளார்.

**பகுதி (ஆ)**

கூட்டுப்பங்காண்மைச் சட்டத்தில், ஒவவ்வொரு பங்குதாரரும் நிறுவனத்தினதும், நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஏனைய பங்குதாரர்களினதும் முகவராகக் கருதப்படுவா

ஆகவே ஒரு பங்குதாரர் நிறுவனத்தின் வியாபாரத்தினை கொண்டு நடத்துவதற்காக செய்கின்ற செயல்கள் நிறுவனத்தையும், ஏனைய பங்குதாரர்களையும் கட்டுப்படுத்தும்.
வழங்கப்பட்ட நிகழ்விலே சண்டி, நிறுவனம் சார்பாகவும், வணிக நிலையத்தின் முகவர் என்ற ரீதியிலும், சாதாரண வியாபார நடவடிக்கை என்ற ரீதியிலும் டாண்டியிடம் இருந்து ரூபா.700,000 வினைப் பெற்றுக்கொண்டார்.

மேலும், சண்டியிற்கு கூட்டுப்பங்காண்மையிலே விற்பனைகளுக்கான பொறுப்பு வழங்கப் பட்டிருந்தமையால், அவர் வாடிக்கையாளர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டால் அது நிறுவனத்தினை கட்டுப்படுத்தும் என்ற உட்கிடையான தத்துவத்தைக் கொண்டிருந்தார் என்பதனை நிகழ்வுகளில் இருந்து உட்கிடையாக அறியமுடிகிறது.
ஆகவே தரப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது, நிறுவனமும் பங்குதாரர்களும் கூட்டாகவும், இணைந்தும், சண்டியால் நிறுவனம் சார்பாக வாங்கப்பட்ட முற்பணத்திற்கு பொறுப்புடையவராக்கப்படுவார்கள் என்பதுடன் நிறுவனமே ஏற்பட்ட நட்டத்திற்குப் பொறுப்பெடுக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட காரணங்களினடிப்படையில், சாண்டி தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாக்கப்படமாட்டார். ஆனால் நிறுவனத்தின் ஒரு பங்குதாரர் என்ற ரீதியில் ஏனைய பங்குதாரர்களுடன் சேர்ந்து பொறுப்பாக்கப்படுவார்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**விடை - 08**

கற்றலின் பயன்விளைவுகள்: 3.4.1. ‘பணம்பெறாத விற்பனையாளருடைய’ உரிமைகளை உள்ளடக்கியதாக விற்போன் மற்றும் வாங்குவோனுக்கு காணப்படும் நிவாரணங்களை விளக்குக.

**பகுதி (அ)**

வழங்கப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு பார்க்கின்றபோது, பிரேண்டாவினால் கொள்வனவு செய்யப்பட்ட பால்மா அதன் நோக்கத்திற்கு பொருத்தமானதல்ல என்பதுடன் உற்பத்தித்தரமுடையதாகவும் இல்லை.

இது அன்ரனினால் மேற்கொள்ளப்பட்ட பொருள் விற்பனை தொடர்பான ஒப்பந்தத்திலே உட்கிடைக் கட்டுறுத்தினை மீறியுள்ளது.

ஆகவே, அன்ரனிடமிருந்து நட்டயீட்டினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறுதியான சட்ட நிலைமையிலேயே பிரேண்டா காணப்படுகிறாள்.

ஆனால் அன்ரன் 150 பால்மா பக்கற்றுகளை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதனைப் பரிசோதித்துப் பார்த்ததுடன் திருப்திகரமான முடிவுகளைத் தரும் வகையில் ஒரு மாதிரியினையும் பரிசோதித்திருந்தார் என்றபோதிலும் மாதிரியை நியாயமாக பரிசீலனை செய்வதன்மூலமாக குறிப்பிட்ட குறைபாட்டினை கண்டறிய முடியாது.

ஆகவே, அன்ரன் கீழ்வரும் அடிப்படையில் டைட்டஸ் என்பவனிடமிருந்து நட்டயீட்டினைக் கோரலாம்.

(i) பிரெண்டா என்பவள் தன்மீது முன்வைத்த உரிமைக்கோரிக்கையின் பொருட்டு அன்ரனிற்கு செலவாகிய பணத்தை டைட்டஸிடமிருந்து பெறலாம்.

(ii) மாதிரியுடனான விற்பனை என்பதற்கு கீழ் பொருட்கள் விற்பனை தொடர்பான உட்கிடை வாசகத்தின் முறிவுக்காகக் கோரலாம்.

கற்றலின் பயன்விளைவுகள்: 6.1.3 காப்புறுதி ஒப்பந்தமொன்றிலே அதியுயர் நல்லெண்ணக் கோட்பாடு (*Uberrimae fidei*) மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய அக்கறைகள், இழப்பெதிர்ப்புத்தொகை தொடர்பாக பிரயோகத்தில் உள்ள கோட்பாடுகளை (முழுமையான மற்றும் பகுதியளவான காப்புறுதி என்பவற்றையும் உள்ளடக்கி) விபரிக்குக.

**பகுதி (ஆ)**

அதியுயர் நல்லெண்ணக் கோட்பாடு என்பதே காப்புறுதிச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும்.

இக்கோட்பாடானது காப்புறுதி செய்துகொள்பவருக்கு (இந் நிகழ்விவே வில்பிரெட்) ஒரு கடப்பாட்டினைச் சுமத்துகிறது. அதன்படி அவர் காப்புறுதி செய்பவருக்கு அளிக்கின்ற விண்ணப்பபடிவத்திலே தனக்குத்தெரிந்த எல்லா அடிப்படை நிகழ்வுகளையும் தெரிவிக்க வேண்டும். இந் நிகழ்வுகளை தெரிந்து கொள்வதனூடாகவே காப்புறுதி செய்பவர் தான் பொறுப்பெடுக்கப் போகும் ஆபத்தினை மதிப்பீடு செய்து கொள்வார்.

அதனால் தன் கடந்த கால குற்றத்தண்டனை பற்றி கூறாமல் வில்பிரெட் மறைத்தமையானது ஒரு ஒழுக்கக்கேட்டினையும் அதே வேளை ஆபத்தை ஏற்றுக்கொள்வதற்று முன்னர் காப்புறுதி செய்பவர் அறிந்திருக்க வேண்டிய அடிப்படை நிகழ்வை அறியத்தராமை என்ற விடயத்தையும் உருவாக்கியுள்ளது.

மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் தீர்க்கப்பட்ட வழக்கான ***Woolcott vs. Sun Alliance and London Alliance Ltd. (1978) 1WLR 493*** என்ற வழக்கிலே கூறப்பட்டுள்ளது.

ஆகவே, வழங்கப்பட்ட நிகழ்வுகளின் பிரகாரம் பார்க்கும் போது வில்பிரெட் அதியுயர் நல்லெண்ணக் கோட்பாட்டினை மீறியுள்ளார்.

ஆகவே காப்புறுதி செய்பவர், காப்பறுதிக் கொள்கையை புறக்கணிக்கவும், காப்பறுதிப் பணத்தை மறுக்கவும் உரித்துடையவராவார்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**விடை - 09**

| |
|---|
| கற்றலின் பயன்விளைவுகள்: 4.2.1 கீழ்வருவன தொடர்பில், காசோலை தொடர்பான சட்டம் மற்றும் அவற்றினது வணிக முக்கியத்துவம் தொடர்பாகப் பிரயோகத்திலிருக்கின்ற கோட்பாடுகளை விபரிக்குக. (புறக்குறிப்பிடுகைள், குறுக்கு கோடிடுதல்கள், மதிப்பளிக்க மறுக்கப்படுதல், வங்கியாளரின் பொறுப்புடமை) |

**பகுதி – (அ)**

சுனில் தன்னுடன் வைத்திருந்த காசோலையானது கட்டளை காசோலை (*Order Cheque*) என்ற வகுப்பாக்கத்தினுள்தான் உள்ளடங்கும். காரணம் காசோலையை வரைந்தவர் சுனிலுக்கு பணம் செலுத்துமாறு கட்டளை வழங்கியுள்ளாரே தவிர, வேறு காவுனருக்கு பணம் செலுத்துமாறு கட்டளை வழங்கவில்லை. அதேபோல பணம் செலுத்துகின்ற வங்கிக்கு காசோலையானது வங்கிக்கணக்கொன்றில் ஊடாக மாத்திரமே செலுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தல் விடுத்திருந்தார்.

ஆனால், அது கட்டளை காசோலையாக இருந்த போதிலும் கூட, குறிப்பிட்ட காசோலையை காலக்கிரமத்தில் வைத்திருப்போன் என்ற அடிப்படையில் சுனில் அதனை புறக்குறிப்பிடுவதன் மூலம் கைமாற்ற முடியும்.

இப்புறக்குறிப்பிடுதல் வலிதானதாகுவதற்கு சுனிலினால் கீழ்வரும் தேவைப்பாடுகள் பு'ர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். அவையாவன:-

- புறக்குறிப்பிடுதல் காசோலையில் எழுத்து வடிவில் காணப்பட வேண்டும் என்பதுடன் புறக்குறிப்பிடுபவர் என்ற வகையில் சுனிலினால் கையெழுத்திடப் பட்டிருக்க வேண்டும்.
- காசோலையின் மொத்த பெறுமதியும் புறக்குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். (உ-ம் காசோலையின் மொத்த பெறுமதிக்கான புறக்குறிப்பிடுதலாக அமைய வேண்டும்) (நாணய மாற்று உண்டியல் கட்டளை சட்டத்தின் பிரிவு 32)

இவ்வாறு காசோலை வலிதாக புறக்குறிப்பிடப்படின் ஹார்டி அதனை ஏற்றுக் கொண்டு, தனது கணக்கில் வரவு வைப்பதன் மூலம் பணத்தை பெற்றுக்கொள்ள இயலும்.

கற்றலின் பயன்விளைவுகள்: 7.4.1- பணியாளர்களை தொழிலிருந்து பணிநீக்கஞ்செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ், தொழிலாளர்களின் பணிநீக்கஞ்செய்யும் நடபடிமுறையினை விளக்குக.

பகுதி (ஆ)

1971ஆம் ஆண்டின் 45அம் இலக்க பணியாளர்களை தொழிலிருந்து பணிநீக்கஞ்செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட தொழிலொன்றில் இருந்து தொழிலாளிகளை நீக்குவதற்கு தொழில் வழங்குநர் சில நிபந்தனைகளை பு' ர்த்தி செய்ய வேண்டும்.

அந்த நிபந்தனைகள் பின்வருமாறு:-

- தொழில் வாய்ப்பை இழக்கச் செய்வது குறித்து தொழிலாளியின் முன் சம்மதம் பெறப்பட்டிருக்க வேண்டும். அல்லது
- தொழில் ஆணையாளரின் எழுத்து பு' ர்வமான முன் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இங்கு வழங்கப்பட்ட நிகழ்விலே தொழில் வழங்குனர் மேற்கூறப்பட்ட எந்தவொரு நிபந்தனையையும் பு' ர்திதி செய்திருக்கவில்லை.

ஆகவே இது குறிப்பிட்ட சட்டத்தன் மீறுதலாக கருதப்படுகிறதுடன் எட்கர் இனுடைய தொழில் நீக்கமானது சட்ட முரணானது என்பதுடன் வெற்று வெறிதானதுமாகும்.

**மாற்றமாக,**

1971ஆம் ஆண்டின் 45அம் இலக்க பணியாளர்களை தொழிலிருந்து பணிநீக்கஞ்செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட ஒன்றிலிருந்து தொழிலாளிகளை நீக்குவதற்கு தொழில் வழங்குநர் சில நிபந்தனைகளை பு' ர்த்தி செய்ய வேண்டும்.

அந்நிபந்தனைகள் பின்வருமாறு:-

- தொழில் வாய்ப்பை இழக்கச் செய்வது குறித்து தொழிலாளியின் முன் சம்மதம் பெறப்பட்டிருக்க வேண்டும். அல்லது
- தொழில் ஆணையாளரின் எழுத்து பு' ர்வமான முன் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், மறுவகையில் தொழில் வழங்குனர் மேற்கண்ட நிபந்தனைகளை பு' ர்த்தி செய்திருப்பின் எட்கரின் தொழில் நீக்கம் முறையானதும் வலிதானதாதும் ஆகும் எனலாம்.

**(மொத்தம் 10 புள்ளிகள்)**